**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# டிஜிட்டல் டோர்ஸ் ஓபன் ப்ராம்ப்ட்டன் (Digital Doors Open Brampton) -இன் இரண்டாம் ஆண்டில் ஒவ்வொரு கதவிற்கும் பின்னால் இருக்கும் கதையைக் கண்டுபிடியுங்கள்

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 23, 2021) – செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 31 வரை குடியிருப்புவாசிகளும் வருகை தருபவர்களும் அவரவர் வீட்டில் இருந்தபடியே **டிஜிட்டல் டோர்ஸ் ஓப்பன்** (Digital Doors Open) எனும் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக ப்ராம்ப்ட்டனின் வரலாறு, பாரம்பரியம் மற்றும் தனித்துவமான கலாச்சார அமைவிடங்களை ஆன்லைனில் பார்த்து அனுபவிக்க முடியும்.

மாகாண அளவிலாக நடைபெறக்கூடிய இந்த நிகழ்ச்சியில், தனது 20 க்கும் மேற்பட்ட வரலாற்று மற்றும் பாரம்பரிய சிறப்பு மிக்க இடங்கள் தொடர்பான சுற்றுப்பயண விவரங்கள், வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களை ப்ராம்ப்ட்டன் நகரம் காட்சிக்கு வைக்கின்றது. இந்த ஆண்டில் புது வரவாக பசுமைக்கான முன்முயற்சிகள் கொண்ட கட்டிடங்கள், நடைபாதைகள், பூங்காக்கள், கடற்கரைகள், ஏரிகள் மற்றும் போற்றிக் காக்கப்படும் இடங்கள் மற்றும் பசுமையான சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் வகையில் இடம் பெறுகின்றன. எங்களுடைய 2021 ஆம் ஆண்டிற்கான இயற்கையை போற்றி வளர்க்கும் நிகழ்ச்சி மூலமாக அனுபவித்து மகிழும் வகையில், வண்ணங்களுக்கான மிகச்சிறந்த இடங்களைக் காணுங்கள் மற்றும் மெய்நிகர் சுற்றுலாவில் பங்கு பெறுங்கள்.

முழுமையானதொரு அனுபவத்திற்கு, : brampton.ca/doorsopen

ஒன்ட்டேரியோ ஹெரிடேஜ் டிரஸ்ட் அமைப்பானது, ஒன்ட்டேரியோ முழுவதிலும் உள்ள சமூகங்களுடன் சேர்ந்து, **டோர்ஸ் ஓபன்** (Doors Open) நிகழ்ச்சி வழியாக, தங்கள் டிஜிட்டல் கதவுகள், வாயில்கள் மற்றும் முற்றங்களை திறக்க பணியாற்றி வருகின்றனர்; இதில் கண்கவர் கலாச்சார மையங்களும் அடக்கம் என்பதால், நீங்கள் வரலாற்றையும் கதைகளையும் தேடி ஆராயலாம்.

மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: doorsopenontario.on.ca.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் ஒரு செழுமையான, கலாச்சார பாரம்பரியம் கொண்ட ஒரு பலகலவை நகரமாகும், மற்றும் டிஜிட்டல் டோர்ஸ் ஓப்பன் எனும் இரண்டாவது ஆண்டு நிகழ்வில் இந்த இடங்களை சுற்றிப்பார்க்க

அனைவரையும் ஊக்குவிக்கிறேன். இந்த ஆன்லைன் நிகழ்வு உங்கள் சொந்த வீட்டின் வசதியிலிருந்து ப்ராம்ப்ட்டனின் மிகவும் பிரியமான இடங்களைப் பார்வையிட வாய்ப்பளிக்கிறது.

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“டிஜிட்டல் டோர்ஸ் ஓப்பன்  நிகழ்வானது மற்றவற்றில் இல்லாத அனுபவத்தை வழங்குகிறது, இது ப்ராம்ப்ட்டன் மற்றும் முழு மாகாணத்தையும் சுற்றியுள்ள இடங்களை தேடிக்கண்டறிய மக்களுக்கு வாய்ப்பளிக்கிறது. எங்கள் பசுமை காக்கும் முயற்சிகள் மற்றும் வெளிப்புற இடங்களை எடுத்துக் காட்டும் வகையில், ப்ராம்ப்ட்டனின் சில சுவாரஸ்யமான இடங்களில் சுற்றுப்பயணங்கள் செய்து, வீடியோக்கள் மற்றும் புகைப்படங்களின் எடுக்க எங்கள் ஆன்லைன் சங்கமிக்கும் இடத்தைப் பார்க்கவும்.

- *ஹர்கிரத் சிங், நகர கவுன்சிலர், வார்டுகள் 9 & 10, தலைமைப் பொறுப்பு, பெருநிறுவன சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

ப்ராம்ப்ட்டன் நகர ஊழியர்கள் டிஜிட்டல் டோர்ஸ் ஓப்பன் ப்ராம்ப்ட்டன் நிகழ்ச்சியின் இரண்டாம் ஆண்டுக்கான மிகச்சிறந்த ஆன்லைன் அனுபவத்தை உருவாக்கியுள்ளனர். நகரத்தின் செழுமையான வரலாறு சொல்கின்ற மற்றும் அழகான வெளிப்புற இடங்களைக் கொண்டாடுங்கள், நீங்கள் முன்னெப்போதும் பார்த்திராத இடங்களுக்குள் ஒரு கண்ணோட்டம் விடுங்கள். நீங்கள் தவறவிட விரும்பாத ஒரு மெய்நிகர் நிகழ்வு இதுவாகும்! "

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும்,  சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, *மற்றும்* Instagram *ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.* www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca